[1978 செப்டம்பர் 14

திருமயம் வட்டத்தில் மோட்டார்களுக்கு மின் இணைப்பு.

*வினு எண். 224—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலுகாவில் எத்தனை கிணறுகளுக்கான மின்சார மோட்டார்களுக்கு மின் இணைப்புக் கோரி மனுக்கள் வந்துள்ளன?

(ஆ) எத்தனை கிணறுகளுக்கு மின் இணைப்பு இந்த ஆண்டு கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்: (அ) 1444 மனுக்கள்.

(ஆ) சுமார் 150 பம்பு செட்டுகள்.

அரசு ஊழியர்களது சேமநிதிக் கணக்குகள்.

*வினு எண். 225—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநில சர்க்கார் ஊழியர்களின் பிராவிடன்ட் பண்டு கணக்குகளை மத்திய சர்க்காருக்குப் பதிலாக மாநில சர்க்காரே நிர்வகிக்க உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

திரு. மீ. வின்சென்ட் : (அமைச்சரின் பேரவை செயலர்).

(அ) தற்போது அத்தகைய செயற் குறிப்பு எதும் இல்லை.

(ஆ) இவ்வினுவிற்கு இடமில்லை.

திரு. எஸ். கணேசன் : புயல், வெள்ளம், மற்ற இயற்கைக் கொடுமைகள் எல்லாம் கேட்டுக் கொண்டு வருவதில்லை. அவை அடிக்கடி வருகின்றன. இதனுல் தொழிலாளர் தோழர்கள் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாக்கப்படுகிருர்கள். வாழ்க்கை கூட அவர்களுக்கு நலிந்து விடுகிறது. இந்த ப்ராவிடண்ட் பண்ட் மத்திய அரசினுல் நிர்வகிக்கப்படுகிற காரணத்தினுல் தொழிலாளர்கள் தங்களுக்குத் தேவையான உதவியை உடனடியாகப் பெறுவதற்குத் தாமதம் ஏற்படுகிறது. எனவே அவர்கள் சௌகரியத்தை முன்னிட்டாவது இந்த வைப்பு நிதியை மாநில அரசே வைத்துக்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன.